## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## MCOP - 71/2023

**நாள் – 13.11.2025**

**PW – 1** பூங்கொடி

**க/பெ.** நவீன்குமார்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of November 2025)**

**குறுக்கு விசாரணை**

1. நான் பஸ் ஸ்டாப்பில் இருந்து ரோட்டை குறுக்காக கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த விபத்து எனக்கு வலதுகால், இடது தோள்பட்டை மற்றும் தலையில் அடிபட்டது. அதில் எனது இடது தோள்பட்டையில் ஆப்ரேஷன் செய்து ராடு வைக்கப்பட்டுள்ளது. நான் 22.11.2022–ம் தேதிக்கு பின்பு தொடர் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை எடுத்து கொண்டு தான் வந்தேன். நான் சொல்வது பொய் என்றும் நான் எந்தவொரு தொடர் சிகிச்சையும் எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அவ்வாறு தொடர் சிகிச்சை எடுத்திருந்தால் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு தொடர் சிகிச்சை எதுவும் நான் எடுக்காததால் தான் அது குறித்த மருத்துவ ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல மாதம் ரூ.25,000/– சம்பாதித்தது கிடையாது என்றும், நான் Cute Fashions கம்பெனியில் வேலை செய்வதாக சொல்லி அதற்கான சம்பள பட்டியலை இந்த வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. நான் முழுமையாக குணமடைந்து நல்ல முறையில் தான் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தோள்பட்டை வலியால் கையை என்னால் தூக்கி வேலை செய்ய முடியவில்லை. அதிக இழப்பீடு பெற வேண்டி மருத்துவ பில்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரோட்டில் வண்டி வருவதை நான் கவனிக்காமல் கவனக்குறைவாக ரோட்டை குறுக்காக கடந்ததால் தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. அதனால் 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** :– இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.13 14:59:59 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**